# பெப்ரவரி – 14 – வியாழன்

## புனித சிறில் மற்றும் புனித மெத்தோடியு

## ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடப்போர் பேறுபெற்றோர்! திபா. 128:1

## முதல் வாசகம் : தொடக்க நூல் 2 : 18 – 25

ஆண்டவராகிய கடவுள், மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று. அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன் என்றார். ஆண்டவராகிய கடவுள் மண்ணிலிருந்து எல்லாக் காட்டு விலங்குகளையும் வானத்துப் பறவைகளையும் உருவாக்கி, அவற்றிற்கு மனிதன் என்ன பெயரிடுவான் என்று பார்க்க, அவற்றை அவனிடம் கொண்டு வந்தார். உயிருள்ள ஒவ்வொன்றுக்கும் அவன் என்ன பெயரிட்டானோ அதுவே அதன் பெயராயிற்று. கால்நடைகள், வானத்துப் பறவைகள், காட்டு விலங்குகள் ஆகிய எல்லாவற்றிற்கும் மனிதன் பெயரிட்டான் தனக்குத் தகுந்த துணையையோ மனிதன் காணவில்லை. ஆகவே ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச்செய்து, அவன் உறங்கும் பொழுது அவன் விலா எலும்பு ஒன்றை எடுத்துக்கொண்டு, எடுத்த இடத்தைச் சதையால் அடைத்தார். ஆண்டவராகிய கடவுள் தாம் மனிதனிட மிருந்து எடுத்த விலா எலும்பை ஒரு பெண்ணாக உருவாக்கி மனிதனிடம் அழைத்து வந்தார். அப்பொழுது மனிதன், "இதோ! இவளே என் எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள் ஆணிடமிருந்து எடுக்கப்பட்டதால், இவள் பெண் என்று அழைக்கப் படுவாள்" என்றான். இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான் இருவரும் ஒரே உடலாய் இருப்பர். மனிதன், அவன் மனைவி ஆகிய இருவரும் ஆடையின்றி இருந்தனர். ஆனால் அவர்கள் வெட்கப்படவில்லை.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறுபெற்றோர்.

## நற்செய்தி : மாற்கு 7 : 24 - 30

அக்காலத்தில் இயேசு அங்கிருந்து புறப்பட்டுத் தீர் பகுதிக்குள் சென்றார். அங்கே அவர் ஒரு வீட்டிற்குள் போனார் தாம் அங்கிருப்பது எவருக்கும் தெரியாதிருக்க வேண்டுமென்று விரும்பியும் அதை மறைக்க இயலவில்லை. உடனே பெண் ஒருவர் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டு உள்ளே வந்து, அவர் காலில் விழுந்தார். அவருடைய மகளைத் தீய ஆவி பிடித்திருந்தது. அவர் ஒரு கிரேக்கப்பெண் சிரிய பெனிசிய இனத்தைச் சேர்ந்தவர். அவர் தம் மகளிடமிருந்து பேயை ஓட்டிவிடுமாறு அவரை வேண்டினார். இயேசு அவரைப் பார்த்து, "முதலில் பிள்ளைகள் வயிறார உண்ணட்டும். பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல" என்றார். அதற்கு அப்பெண், "ஆம் ஐயா, ஆனாலும் மேசையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் சிறுபிள்ளைகள் சிந்தும் சிறு துண்டுகளைத் தின்னுமே" என்று பதிலளித்தார். அப்பொழுது இயேசு அவரிடம், "நீர் இப்படிச் சொன்னதால் போகலாம் பேய் உம்மகளை விட்டு நீங்கிற்று" என்றார். அப்பெண் தம் வீடு திரும்பியதும் தம் பிள்ளை கட்டிலில் படுத்திருக்கிறதையும் பேய் ஓடிவிட்டதையும் கண்டார்.

**தியானம்:** இயேசு கடவுளின் ஆட்சிபற்றிய நற்செய்தியை மக்களுக்கு அறிவித்தபோது பெரும்பாலும் யூதமக்கள் நடுவேதான் சென்று போதித்தார். ஆனால் சில வேளைகளில் அவர் பிற இனத்தார் வாழ்ந்த பகுதிகளுக்கும் சென்றார் எனவும் பிற இனத்தைச் சார்ந்தவர்களுக்கும் குணமளித்தார் எனவும் நற்செய்தியில் காண்கின்றோம். தீர் என்னும் நகர்ப்பகுதியில் வாழ்ந்த பிற இனத்தைச் சார்ந்த பெண் அவரை அணுகி வந்து இயேசுவின் காலில் விழுந்து ஒரு வேண்டுகோலை முன்வைக்கின்றார். தம் மகளை பிடித்திருக்கும் பேயை ஓட்டிவிடும் என இயேசுவிடம் வேண்டுகின்றார். அந்த பெண்ணுக்கு மிகுந்த துணிச்சல் இருந்திருக்க வேண்டும். அவள் பிற இனத்தைச் சார்ந்தவள் என்பது மட்டுமல்ல, அவள் ஒரு பெண்! அக்காலத்தில் பெண்களுக்கு ஆண்களோடு சம மதிப்பு இருக்கவில்லை. பிற இனத்தாரோடு யூதர் உறவாடுவதில்லை. அப்படியிந்தும் அப்பெண் இயேசுவை அணுகிவந்திருக்கிறாள். இயேசு அவளின் வேண்டுகோலை மறுத்ததும் வாதாடவும் அப்பெண் தயங்கவுமில்லை. தன்னை இயேசு ஒரு நாய்க்கு ஒப்பிடுகின்றாரே என அப்பெண் கவலைப்படவுமில்லை. மேசையிலிருந்து விழுகின்ற உணவாவது நாய்க்குட்டிக்குக் கிடைக்குமே என அப்பெண் இயேசுவிடம் கூறுகின்றார். இறுதியில் இயேசு அப்பெண்ணின் ஆழ்ந்த நம்பிக்கையைக் கண்டு வியப்புறுகின்றார். அவருடைய வேண்டு கோலை நிறை வேற்றுகின்றார். கடவுள் இயேசு வழி கொண்டு வந்த மீட்பு உலகில் வாழ்கின்ற எல்லா மக்களுக்கும் கடவுள் வழங்குகின்ற கொடை என்பதை நற்செய்தியாளர் தெளிவாக உணர்த்துகின்றார். நம்பிக்கை ஒருநாளும் வீண்போவதில்லை என்றும் துன்பங்கள் நடுவிலும் நாம் தொடர்ந்து இறையருளை நாம் நாட வேண்டும் என்பதையும் இந்நற்செய்திப் பகுதி நமக்கு காட்டுகின்றது ஆமென்.